**பிங்கிரிய பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 13 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பிங்கிரிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

(அ) 2018 ஆம் ஆண்டுக்கு உரிய ரூபா 5,571,477 பெறுமதியான கட்டட நிர்மாணச் செலவானது மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்களாகக் கணக்கிடப்பட்டிருந்ததோடு, மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,128,423 பெறுமதியான கட்டிட நிர்மாணச் செலவு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 601,117 பெறுமதியான 33 இன்வென்ட்ரி உபகரணங்கள் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) கடந்த ஆண்டின் மூலதன உதவிக் கணக்கு மீதி ரூபா 1,000,000 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்ததை சரி செய்யத் தேவையான குறிப்பேடுகளில் சரியாகக் கணக்கிடப்படாத காரணத்தால் திரண்ட நிதி மற்றும் தொங்கல் கணக்கில் ரூபா 2,000,000 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்குரிய செயற்படாத 02 வங்கிக் கணக்குகளில் காணப்பட்ட மீதியான ரூபா 1,001,767 பெறுமதி நிதி அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 04 கணக்குகளின் நிதி அறிக்கைகள் மற்றும் அவற்றுக்குரிய துணைப் பதிவேடுகளில் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத் தொகையான ரூபா 66,508,360 பெறுமதி இணக்கம் செய்யப்படாமல் காணப்பட்டது.

#### 1.3.3 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொங்கல் கணக்கில் ரூபா 5,360,283 ஆன வரவு மீதியொன்று காணப்பட்டது.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 69,595,424 ஆகவிருந்த பெற வேண்டிய கணக்கு மீதியின் ரூபா 268,550 பெறுமதியானது 01 ஆண்டுக்கும் மேலாகவும் 03 ஆண்டுகளுக்கு குறைந்த மீதியாகக் காணப்பட்டதோடு, ரூபா 2,168,559 பெறுமதியானது 03 ஆண்டுகளுக்கும் மேலான மீதியாகவும் காணப்பட்டது. மேலும், ரூபா 14,572,253 பெறுமதிக்கு உரிய கால பகுப்பாய்வானது கணக்காய்வின் போது முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 69,272,758 ஆகக் காணப்பட்ட செலுத்த வேண்டிய கணக்கு மீதியான ரூபா 1,938,138 பெறுமதியான மீதி 01 ஆண்டுக்கும் மேலாகவும் 03 ஆண்டுகளுக்குக் குறைவானதாகவும் காணப்பட்டதோடு, 03 ஆண்டுகளுக்கும் மேலாகக் காணப்பட்ட நிலுவையான ரூபா 3,066,033 பெறுமதியை செலுத்தித் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்தோடு ரூபா 9,968,039 பெறுமதிக்கு உரிய கால பகுப்பாய்வானது கணக்காய்வின் போது முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் காரணமாக ரூபா 244,191,119 கூட்டுத் தொகையான 06 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாமல் இருந்தன

### 1.3.6 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை |
|---|---|---|
| (அ) 1987 இலக்கம் 15 உடைய பிரதேச சபை சட்டக் கோவை | | |
| பந்தி 154 (1) | 1,522,793 | மீளாய்வாண்டில் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்டிருந்த 10 காணிகளின் விற்பனை விலையிலிருந்து 01 சதவீதம் என அறவிடப்படாமல், ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையிலிருந்து 01 சதவீத பெறுமதி மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிகள் | | |
| (i) விதி 5(6) | 67,660,118 | குறிப்பிட்ட கால எல்லைக்குள் சபைக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து வருமானங்களும் ஏனைய கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 218 | 164,711,550 | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக ஆண்டுக்கு ஒரு தடவையாவது மெய்மையாய்வு செய்யப்பட்டிக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டெழும் செலவினங்களை விஞ்சிய வருமானம் ரூபா 13,457,616 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 21,015,363 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

----------------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

--------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | ------------ | --------------- | ----------------- | ----------------- | ---------------- | --------------- | --------------- | --------------- | --------------- |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | வீதவரி மற்றும் வரி | 3,319,164 | 4,298,814 | 4,156,815 | 209,953 | 2,967,000 | 3,865,000 | 4,031,000 | 67,934 |
| ii | வாடகை | 13,928,798 | 14,662,448 | 14,576,193 | 969,738 | 14,050,000 | 12,428,000 | 12,094,000 | 883,483 |
| iii | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 380,000 | 790,538 | 789,538 | 1,000 | 355,000 | 878,000 | 878,000 | - |
| iv | ஏனைய வருமானம் | 74,163,500 | 72,047,353 | 72,047,353 | 66,222,636 | 75,257,000 | 72,437,000 | 45,103,000 | 55,917,294 |
| | | 3,319,164 | 4,298,814 | 4,156,815 | 209,953 | 2,967,000 | 3,865,000 | 4,031,000 | 67,934 |
| | மொத்தம் | 13,928,798 | 14,662,448 | 14,576,193 | 969,738 | 14,050,000 | 12,428,000 | 12,094,000 | 883,483 |
| | | 380,000 | 790,538 | 789,538 | 1,000 | 355,000 | 878,000 | 878,000 | - |

#### 2.2.2 வருமானத்தை அறவிடும் செயற் திறன்

-------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 91.8 மில்லியன் மற்றும் முந்தைய ஆண்டுகளின் நிலுவை வருமானம் ரூபா 56.8 மில்லியன் பெறுமதிகளிலிருந்து அறவிடப்பட்ட வருமானம் ரூபா 91.6 மில்லியன் மாத்திரம் ஆகும். முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 வரை 56.8 மில்லியன் பெறுமதியாகக் காணப்பட்ட நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 67.4 மில்லியன் பெறுமதி வரை அதிகரித்திருந்தது.

**2.2.3 வாடகை**

முந்தைய ஆண்டின் இறுதியில் ரூபா 883,483 ஆகக் காணப்பட்ட நிலுவை வாடகை வருமானமானது மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 969,738 ஆக அதிகரித்திருந்தது.

**2.2.4 வேறு வருமானங்கள்**

பல ஆண்டுகளாக அறவிடப்படாதிருந்த ரூபா 203,095 பெறுமதியும், திரும்பிய காசோலைகளுக்கு உரிய ரூபா 53,717 பெறுமதியும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 11,500,000 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 15,000,000 ஆக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 24 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 12 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையப்படாமை

பௌதீக அபிவிருத்தி அறிக்கையின் பிரகாரம் ரூபா 2,651,762 பெறுமதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 28 பாதைகள் சரளைக் கற்களிட்டு செப்பனிடத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 21 பாதைகளில் சரளைக் கற்கள் இடப்படாமல் காணப்பட்டன.

(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்காக தொடர்ச்சியான செலவுகள் ரூபா 4,533,521 மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 1,149,660 செலவிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் கொம்போஸ்ட் உரம் 14,210 கிலோ கிராம்கள் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததோடு அதில் 13,548 கிலோ கிராம்கள் ரூபா 108,384 பெறுமதிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன.

(ஈ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

மீளாய்வாண்டில் அபிவிருத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்த 38 ஏக்கர் 1 ரூட் 27.07 பேர்ச் இடத்தில் களை அகற்றி அழிப்பதால் ஏற்படக் கூடிய சுற்றுச் சூழல் பாதிப்பைக் குறைப்பதற்கான செயற் திட்டங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) "நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030" தொடர்பாக சபை அறிந்திருக்காததால் 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கான இலக்குகளுடன் சபையின் செயற்பாடுகளை இணைத்து செயலாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிலையான அபிவிருத்தி இலக்குகள் 15 இல் குறிப்பிடப்பட்டுள்ள புவியியல் சுற்றுச்சூழல் அமைப்பின் நிலையான பயன்பாடு, காடழிப்பதை எதிர்த்து நடவடிக்கை எடுத்தல், நிலச் சீரழிவை நிறுத்துதல், புனர்வாழ்வு மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகள் எண் 12 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களை மோசமாகப் பாதிக்கும் விதத்தில் முந்தைய ஆண்டுகளில் தொடர்ச்சியாக தென்னந் தோப்புக்களில், வீடுகள், காணிகள் உருவாகி வருவது அவதானிக்கப்பட்டதோடு மீளாய்வாண்டில் மாத்திரம் 39 ஏக்கர்களுக்கும் அதிகமான தென்னந் தோப்புக்களில் வீடுகள், காணிகள் உருவாகி இருந்தன.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய பிங்கிரிய மற்றும் போவத்த சந்தை வளாகங்களில் 02 அறைகளின் மாதாந்த வாடகை மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கீமனி அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டிருந்த போவத்த சந்தை வளாக கடைகளை அகற்றி புதிய தொகுதியில் கடைகளை வழங்கும்போது பழைய கடை உரிமையாளர்கள் 06 பேருக்கு புதிய கடைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குரிய டிபர் வண்டியின் 03 மாத காலத்துக்குள் ரூபா 1,676,520 பெறுமதியில் முடிவடைய வேண்டிய பழுது பார்த்தல் நடவடிக்கையானது, 03 ஆண்டு காலமாக ஒரு தனியார் பழுது பார்க்கும் இடத்தில் வண்டியை செயலற்று நிறுத்தி வைத்திருந்ததால் சேதமடைந்திருந்த பாகங்களை புதிதாக இட ரூபா 201,400 பெறுமதி அதிகமாகச் செலுத்த வேண்டியிருந்தது.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட 27 இரண்டாம் நிலைப் பதவிகளில் 13 வெற்றிடங்கள் காணப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களில் சேர்க்கப்படாத, உள்ளூராட்சித் திணைக்களத்தால் இணைத்துக் கொள்ளப்பட்ட 13 அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் 04 முன்பள்ளி உதவியாளர்கள் சபையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

(ஆ) 2013 திசெம்பரில் பதவியில் சேர்ந்ததிலிருந்து பெண் அலுவலக உதவி அலுவலரிடம் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்குரிய வேலைகள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) சபையில் பணியாற்றி வந்த III ஆம் தரத்தைச் சேர்ந்த பெண் அலுவலக உதவி அலுவலர் தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 23.1 பிரிவின் பிரகாரம் 2017 மார்ச் 02 ஆம் திகதியிலிருந்து 2017 மார்ச் 06 ஆம் திகதி வரை விடுமுறை அங்கீகரிக்கப்படாத நிலையில் நாட்டை விட்டுச் சென்றிருந்தார்.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமல் இருந்தமை

27 கட்டிடங்கள் சம்பந்தமான தகவல்கள் சபையில் இருந்த போதிலும், அவை தொடர்பாக பீ.எஸ் 46 வடிவத்தின் பிரகாரம் ஆவணமொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

சபை பயன்படுத்தி வரும் டிபர் வண்டி, க்ரூ கெப் ரக வாகனம் மற்றும் கர ட்ரக்டர் வண்டி ஆகியவற்றை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

ரூபா 374,136 பெறுமதியான 02 கல் குவாரி இயந்திரங்கள் 04 ஆண்டு காலமாக செயலற்ற நிலையில் காணப்பட்டன.

### 3.4.4 வாகன பயன்பாடு

சபைக்குரிய டிபர் வண்டியின் ரேடியேட்டர் மற்றும் நீர் குளிர்விப்பான் அமைப்பை பழுது பார்க்க ரூபா 55,000 பெறுமதி மதிப்பிடப்பட்டு நீர் குளிர்விப்பான் அமைப்பை மாத்திரம் பழுது பார்த்து, ரேடியேட்டரைப் பழுது பார்ப்பதற்காக ரூபா 24,000 பெறுமதி மேலதிகமாக மதிப்பிடப்பட்டு புதிதாக ரேடியேட்டர் ஒன்றை பொருத்தியதாகக் குறிப்பிட்டு பணம் செலுத்தப்பட்டிருந்தது. இந்த டிபர் வண்டியைப் பழுது பார்க்க வேலைத் திட்டம் இலக்கம் 02 இன் பிரகாரம் வண்டியின் முன்பாகத்தைப் புதிதாகப் பொருத்துவதற்கு ரூபா 280,000 செலுத்தப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி டிபர் வண்டியை பௌதீக ரீதியில் பரிசோதித்துப் பார்த்த போது அதிலிருந்த டேஷ் போர்டில் வர்ணப் பூச்சு பூசப்பட்டிருந்தது. முன்பாகம் புதிதாகப் பொருத்தப்பட்டிருந்தால் வர்ணப் பூச்சு பூசப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதோடு வண்டியிலிருந்து அகற்றப்பட்ட முன்பாகத்தை சபை பொறுப்பேற்றிருக்கவில்லை.

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 வழங்கல் மற்றும் சேவைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையின் பேரில் ரூபா 10,500,000 பெறுமதியான குறைந்த விலையை முன் வைத்த வழங்குனரை நிராகரித்து விட்டு ரூபா 11,913,000 பெறுமதியான விலைக்கு சபைக்கு ஒரு பெகோ லோடரை வாங்கியதால் ரூபா 1,413,000 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குரிய டிபர் வண்டியின் ரூபா 515,000 பெறுமதியான வெளிப் புற பழுது பார்ப்பு வேலைகளுக்கான விலை மனுக் கோரல் 2016 திசெம்பர் 29 ஆம் திகதிக்குரிய பொது நிர்வாக சுற்றறிக்கை எண் 30/2016 இன் பிரகாரம் நடைபெற்றிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுகளைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டின் நிதி அறிக்கைகள் 2018 ஜுன் 13 அன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) செலவு மதிப்பிடப்படாத நிலையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 19,780,515 பெறுமதியான 24 அபிவிருத்தித் திட்டங்கள் மீளாய்வாண்டில் நிறைவடைந்திருந்தன.

(ஆ) திட்டங்களுடன் தொடர்புடைய செலவீனங்களுக்கு உரிய வரவுசெலவு ஒதுக்கீடானது நூற்றுக்கு 10 இலிருந்து நூற்றுக்கு 100 வரைக்கும் வேறு செலவீனங்களுக்கு மாற்றப்பட்டும் எஞ்சியும் காணப்பட்டது.

### 4.3 உள்ளக கணக்காய்வு

சபையின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக 04 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளக கணக்காய்வு வேலைகள் நடைபெற்றிருக்கவில்லை. ஆகவே உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் சுயாதீனமாக இருக்கவில்லை என்பதோடு உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் தலைமை கணக்காய்வாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | தொங்கல் கணக்கு மீதி தீர்வுசெய்யப்படாமை |
| | | (ii) | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை |
| (ஆ) | சொத்துக்கள் / ஆதனங்கள் கட்டுப்பாடு | | கட்டிடங்கள் ஆவணங்களில் உட்படுத்தாமை |
| (இ) | கடன்பட்டோர்/ கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | காலப்பகுப்பாய்வு தயாரிக்காமை |
| | | (ii) | நீண்டகாலம் இருந்து வரும் இனங்காணப்படாத மீதிகள் காணப்படல் |
| (ஈ) | வழங்கலும் சேவையும் | (i) | ச்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணஙகாமை |
| | | (ii) | தாமதத்துடன் மேற்கொள்ளல் |